உ

கணபதி துணை.

ப்பு.

அம்பலவாண நாவலர்

போலியுரை மறு

இது.

சோழவந்தானூர்

அரசஞ்சண்முகனாரால்

எழுதப்பெற்று

ஓரேவி ... லுள்ள
று சின் ... ரவிரு

இங்கு
க் கால. அவ்வே
காமலன்றி, அவ்விருப்பு
கற்கேயல்ல ஆறு.

தியாது வாரண முதல்
விட்டுப் பழிக்குமத்தலான் அ
ஓரேவிஷயப் பிரதிபத்தியிற் பல
க்கெல்லா டமையாது ஒன்றுமறியாப்
விவேகம்த்தகற்கு மிளையார்புடையிலும் தங்கு
ணுச்சிரமங்கொண்டு அச்சிரமத்தால்
பெனக் களித்துத்திரிவது
லுதும்.

1918.

உ

கணபதிதுணை.

அம்பலவாணநாவலர்

போலியுரை மறுப்பு.

ஈழத்தினின்று போந்த நமது புண்ணிய பூமியாகிய
பழம்பதியில் வசித்தும் ரிந்தை மேற்கொண் டெழுதலே முன்
பலவாணநாவல ரென்பாமோருவர் அரசஞ் சண்முகவி
பத்திப் பிரதிபத்தி முதற்பாகமெனப் பெயரிட்டு ஒரேவி ங்காரமாத்
குறித்து வெளியிட்ட போலியுரைப் பிரதியொன்று சின் ரவிலுள்ள
னர்க் காணப்பட்டது. ாயிரவிரு

ஈழத்தம்பலவாணரது பாழத்தம்பல பொதிந்த அவ்வி து நன்
டயம் நாற்பத்தெட்டுப் பக்கஞ் சென்றும் முடிவுருமையானு டமைத்
தியவரையுஞ் சழக்குரையேயன்றி வழக்குரை யன்மையானும், பிரமெ
வாதி தன் மேற்கோளைச் சொல்லி முடித்தாலன்றி யிடையே யெதி
ர்வாதஞ் செய்தல் முறையன்மையாலும், அவர் கருதிய ஒரேவிட
யம் ஒரு பக்கத்து ளடங்குவதாகவும் அறுநான் கிரட்டி சென்று த்
முடிவுருமையேயன்றி முன்னொடுபின்மயங்கக் கூறலான் ஒருபொ ஹி
ருட்டாக மதிக்கப்படாமையானும், அது வஞ்சமும் வீணுரவாரமு ரபல
பிதற்றும் வசையுமாகமுடிந்து தம்பழியெண்ணாது பிறன்பழிகூறு டி
யொருபக்கமேனும் விடாது மேற்கோடலானும், இங்ங ாம் வலின்
கொண்டு தூற்றுவார்க்கெல்லாம் விடை கூறப்பக் ர் கால. அவரைய
கழிதலானும் இதுவரை யவர்க்கு வாளாவிருந்தாமல்லறி, அவ்வாறுப்புற்
அரங்கின்றி வட்டாடுமவர் கல்வியாற்றலுக் கஞ்சியன்று. ர

ஈழத்தார் தம் மேற்கோளைச் சாதியாது வாரண முதலா, ரின
போன்று காரணமின்றியுஞ் சண்டையிட்டுப் பழிக்கமைத்தலான் அ
மும் பொருளுங் கைவிட்டுத் தமது ஒரேவிஷயப் பிரதிபத்தியிற் பல
விதவைதலைமேற்கொண்டொழுகலோ டமையாது ஒன்றுமறியாப்
பேதையர் வாயிலும், சிறிதேதகற்கு மிளையார்புடையிலும் தங்குறி
வழக்க மிகவெடுத்து நாட்டி வீணாச்சிரமங்கொண்டு அச்சிரமத்தால்
வருவது துன்பென வறியாது இன்பெனக் களித்துத்திரிவது ங்ஙனை
ற்கூறுதும்.

ந்த விஷயமேயாகலானும், எம்மட்டுமென்றிச் சார்ந்தாரையும் இடையிடின்றி யார்மாட்டும் யாண்டுஞ் சென்று புறங்கூறித்திரிதலானும், சிலர் அவர் பிதற்றையும் நம்பி மயங்கலானும், எமது விருத்திக்கண் ...ராய்ச்சி செய்தலென்ற ஆவின்றேல் போர்த்துப் பழிசுமத்தலெ... மேய்தலைக்கொண்டு கொடுவரியென்ன வடுவறியாது திரிகி...வாரதுசெய விற்றெனவுணராப் பெற்றியார் மயக்கொழிதற் ...மறுப்பெழுதல் கடனெனப் பெரியார் சிலர் சட்டளையிடுதலானும், அவருரை முற்றுமையேயன்றிப் பொருட்டாகாமையுடைத்தேனினும் இது பொழுது வெளிப்போந்தவரை மறுத்தல் இன்றியமையாதாயிற்று.

தொல்காப்பியச் சண்முக விருத்தியென்னுந் தொடர்மொழியுள் முதன்மொழிநீக்கி யேனைமொழிகட்கு இலக்கணமும் பொருளுங்கூறுவார்போன்று தமது கருத்தில் நிந்தையேகொண்டு விந்தை ... விண்டு வாதத்துக்கு வேண்டாதன பல கூறுகின்றார். இது போல்வவற்றை மறுத்தல் கற்றறிந்தார் கடனன்மையின் அவற்றை விடுத்து ஏனையவற்றுள் எமது விருத்தியின் மறுப்பென அவரெண்...ியவற்றையும் அவற்றின் சார்பையும் முறையானே அநுவதித்து ...ாயவாயிலான் மறுத்துப் பின்னர் அவரது பிரதிபத்தியின் வழுக்...ழவுங் காட்டப்படும்.

அவர் "சண்முகவிருத்தி மெய்யுரையன்று பொய்யுரை.என்னை" ...யன்று தொடங்கிப் பின்னுஞ் சிலகூறி முடிவில் "நன்னூலார்சொல்லாத...தொன்றை யவர் சொன்னாரென்றும் சொல்லியதொன்றையவர் சொன்னாரல்லரென்றும் வரைந்து பெரும்புரட்டைச் செய்தனர், அவ்வரசஞ் சண்முகனாரகவினென்க." என்றார்.

இத்தொடர்மொழியால் ஈழத் தம்பலவா...ருள்ளத்துள் நின்றவற்றுள் மூக்குற்றங்கள் வெளிப்பட்டன; அவை நன்னூலார் சொல்லாத தொன்றை யாஞ்சொன்னேமென்பதும்,அவர் சொல்லிய தொன்றை யாஞ்சொன்னா ரல்லரென்றேமென்பதும், இவ்விருசெயலும் பெரும்புரட்டெனப் பேதைகளை மருட்டி யாம் பெரும் புரட்...ய்தோமென்பதுமாம்.

இனி அவ்வீழத்தாரது முக்குற்றத்தை யாராய்வாம். முன்னோர், மகளிர்க்கு அணியுமாடையும் என்றாற்போன்ற பல உவமங் கூறி இன்றியமையாமைச் சிறப்பையும் அலங்காரமாதற் சிறப்பையும் விளக்கினர். நன்னூலார்,

"மாடக்குச் சித்திரமு மாநகர்க்குக் கோபுரமும்
ஆடமைத்தோ ளல்லார்க் கணியும்போல்—நாடிமுன்
ஐதுரையா நின்ற வணிந்துரையை யெந்நூற்கும்
பெய்துரையா வைத்தார் பெரிது"—என்று அலங்காரமாத்

திரைக்கே யுவமை கூறினர். இவ்வாற்றான் அவ்வெண்பாவிலுள்ள வுவமைக்கருத்தை யாசங்கித்து அதனை யநுவதித்துப் பாயிரவிருத்தியில் "இனி முன்னோர் கூறிய இவ்வுவமத் தியல்புணராது நன்னூலார் மாடக்குச் சித்திரமு மாநகர்க்குக் கோபுரமும் ஆடமைத்தோ ளல்லார்க் கணியும்போல் நூற்கணிந்துரையாவதே பாயிரமெனக் கூறினர்" என்றும்.

ஈழத்தார் இவ்வாக்கியத்துள் மேலே வெண்பாவில் 'அணிந்துரையை எந்நூற்கும்' என்றிருக்கவும் அதன்கண் இல்லாத ஏகாரத்தை விரித்து அணிந்துரையாவதே பாயிரமென்று ரென்றமை நன்னூலார் சொல்லாத தொன்றைச் சொல்லலென்னுங் குற்றமென்கின்றனல

இதுபோல்வன சொல்லாத தொன்றைச் சொல்லலென்னுமடிகுற்றமாகா. என்னை; அணிந்துரையாவதே பாயிரமென்றுரென்றது அநுவாதமாகலானும், அநுவாதம் பிறர் கூற்றை யவர்கூறியவாறே படியெடுத்துரைத்தலும், அவர் கூற்றின்கருத்தைத் தங்கூற்றாற் கூறலுமென இருவகைத்தாகலின்; அணிந்துரையாவதே பாயிரமென்ற அநுவாதம் மேலே வெண்பாவின் கருத்திதுவென்று தங்கூற்றாற் கூறியதாகலானும், பிறன்கூற்றுச் சுருங்கியதாயிற் படியெடுத்துரைத்தலும், சொற்பல்கியவழித் தங்கூற்றாற் சுருக்கிக் கூறலும் வழக்காதலானும், அங்ஙனமே சேனாவரையர் நச்சினார்க்கினியர் சிவஞானமுனிவர் முதலாயினாருங் கூறிப்போதலானுமென்பது.

இனி, சேனாவரையர் முதலாயினார் பிறர் கருத்தறிந்து தங்கூற்றாலநுவதித்தார்; ஈண்டு நன்னூலார்கருத்துக்கு மாறாக 'அணிந்துரையாவதே' என்று ஏகாரத்தை விரித்தமை குற்றமாமெனிற்கூறுதும்.

நக்கீரனார், பொதுப்பாயிர மென்பது எல்லா நூன்முகத்தும் உரைக்கப்படுவதெனவும் சிறப்புப் பாயிரமென்பது தன்னாலுரைக்கின்ற நூற்கு இன்றியமையாத தெனவும், இருவகைப் பாயிரத்துக் [கு]ம் வேறு வேறிலக்கணங் கூறினார். அவ்வுரையால் எல்லா நூன்முகத்தும் உரைக்கப்பட்டுப் பொதுவாய் நிற்றல் ஆக்கியோன்பெயர் [மு]தலாயவற்றால் ஒருநூற்கே யுரிமையுடைய சிறப்புப் பாயிரத்துக்கின்றெனலும், முதனூற் பொதுவே வழிநூற்குமமைதலானும் அதனால் வழிநூல் பொதுப்பாயிரமின்றியு நடைபெறல் கண்கூடாதலானும் இன்றியமையாமை பொதுப்பாயிரத்துக்கின்றெனலும் வெள்ளிடை மலைபோல் விளங்குகின்றன. இம்மட்டோ?

இளம்பூரணவடிகளு மிதனை விளக்கிப் பாயிர மின்றியமையாச் சிறப்பிற்றாயும் அலங்காரமாதற் சிறப்பிற்றாயும் வருமெனமுன்னர்க் கூறி, இருவகைப்பாயிரத்துள் இன்றியமையாச் சிறப்பிற்று யாது அலங்காரமாதற் சிறப்பிற்று யாது என்னுங் கடாவையுட்கொண்டு எல்லா நூன்முகத்தும் பொதுவாக வுணர்த்தப்படுதலின் பொதுவெனப்பட்டதெனவும், ஈவோன்றன்மை முதலிய நூலுட் சொல்லும் [பொ]ருளல்லாத புறப்பொருளைக்கூறும் பொதுப்பாயிரம் போலாது [இ]ந்நூலிற் சொல்லப்படுகின்ற பொருள் முதலியவுணர்த்தலின் அணி[யி]ழைமகளிர்க்கு அவ்வணியிற்சிறந்த ஆடைபோல நூற்குச்சிறத்த[லா]ற் சிறப்பெனப்பட்டதெனவுமுரைத்தார்.

இதனாற் பொதுப்பாயிரம் அணிபோல அலங்காரமாதற் சிறப்பிற்றெனலும், சிறப்புப்பாயிரம் ஆடைபோல அணியாதலோடுஇன்றியமையாச் சிறப்பிற்றெனலும் தேற்றமாம். அன்றியும், தற்காலத்துள்ள எல்லா நூல்களுக்குங் காலத்தானும் பெருமையானும் முற்பட்டதும், ஆரிடமுமாகிய தொல்காப்பியமே பொதுப்பாயிரமின்றிச் சிறப்புப்பாயிரத்தொடு மாத்திரம் நிலவுகின்றது. அதனாலுரைகாரர் பிறநூலிலிருந்தெடுத்துப் பொதுப்பாயிர முரைத்தார். இவ்வாற்றான் நூல்கள் சிறப்புப்பாயிரத்தொடுகூடியே நிற்றலும், பொதுப்பாயிரத்தொடு கூடியுங் கூடாதும் நிற்றலுங் கண்டு கொள்க.

இது கருதியே முன்னோர் மகளிர்க்கு அணியுமாடையும்போல வெனவும், சுவர்க்குப்பாவை போலவும் நகர்க்கு வாயின்மாடம் போ

லவும் எனவும், ஆகாயத்திற்குத் திங்களும் ஞாயிறும்போல எனவும் பிறவுங்கூறி உவமையால் அலங்காரமாதற் சிறப்புடைய பொதுப் பாயிரத்தியல்பையும் அதனோடு இன்றியமையாச் சிறப்புடைய சிறப்புப்பாயிரத்தியல்பையு முணர்த்தினர். நன்னூலாரோ "மாடக்குச் சித்திரமு மாநகர்க்குக் கோபுரமும்-ஆடமைத்தோணல்லார்க்கணியும்போல்-நாடிமுன்-ஐதுரையாநின்ற வணிந்துரையை யென்னூற்கும்-பெய்துரையா வைத்தார் பெரிது" என்றமையால் அணியாதலுடன் இன்றியமையாச் சிறப்பிற்றாய சிறப்புப்பாயிரத்துக்கு உவமை கூறாது அலங்காரமாதற் சிறப்பினையுடைய பொதுப்பாயிரத்துக்கே உவமை கூறினர் என்பது தேற்றமாம். இது கருதியே அணிந்துரையாவதே பாயிரமென்றார் என்று தங்கூற்றால் ஏகாரம் விரிக்கப் பட்டது. இனி இவ்வாதத்தால் நன்னூலார் சொல்லாத ஏகாரத்தை விரித்துச் சொன்னேமென்றும் நன்னூலார் சொல்லிய இன்றியமையாமையை மறைகதே மென்றும் ஈழத்தார் வாய்ப்பறை கொண்டு தூற்றிய பதடிகளொதுங்கி வீழ்தலும் நன்னூலார் கருத்திற்றெனலுங் காட்டப்படும்.

அநுவாத முகத்தால் ஏகாரத்தைச் சேர்த்தெழுதியது குற்றமின்றாகவும் அதனையோர் பெருங்குற்றமாகப் பிதற்றிய ஈழவம்பலவாணரது அண்டப்புரட்டையும் அறிவின்மையையும் ஈண்டுக்காட்டி மேற்செறும்.

இவரது அநுபபத்திப்பிரதிபத்தி என்கிற ஆபாசச்சுவடி முகப்பில் "மதுரை திருஞான சம்பந்த சுவாமிகளாதீனத்து ஸ்ரீமகா சன்னிதானத்தில் திருவுளக்குறிப்பின்வழி" எனத்தொடுத்தெழுதியுள்ளார். இதனால் ஸ்ரீதிருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனத்து மஹா சந்நிதானத்தின் கட்டளைப்படி இவர் இதனை யெழுதுவித்து வெளியிட்டதாகக் கூறியிருக்கின்றார். இவர் தாமே யெழுதியதாக வெளியிடின் இவரது வெற்றுரையின் அபலத்தை நன்கறிந்த இத்தமிழ் நாட்டார் இதனை யொருபொருட்டாக மதியாது விடுத்தலுடன் கையாற்றீண்டவும் நாணிக் காலடிப்படுத்துவரென்பதைத் தெரிந்தே இந்நாவலர் ஷெ மஹாசந்நிதானத்தின் ஆணை பெற்றெ... தியதாகக்காட்டி உலகத்தை ஏமாற்றக்கருதி ஆணை பெற்ற...

ஓர் அண்டப்புரட்டுச் செய்தனர். இவரது குழறுபடைச்சுவடிக்கு முச்சங்கமிருந்த முதற்பதியிலெழுந்தருளும் சற்குருமூர்த்திகள் ஆணைகொடுத்தல் இயலுமோ என்று ஐயுற்றுக் குருசுவாமிகள் சந்நிதானத்துக்கு ஒரு விண்ணப்பப் பத்திரமுய்த்தேம். அது வருமாறு:—

உ

சிவமயம்.

ஆசாரியவரிய பரசமய கோளரியும் ஞானசிவாசாரிய சுவாமிகளுமாகிய ஸ்ரீலஸ்ரீ மஹாசந்நிதானத்தின் திருவடிக் கமலங்களுக்கு அடியேன் சோழவந்தான் சண்முகன் மிகவணக்கமா வெழுதிக்கொள்ளும் விண்ணப்பம்.

சுவாமியவர்கள் திருவுளப்பிரசாத முண்டானபடியால் அடியேன்மீது கிருபைகூர்ந்து திருமுகம் பாலித்துத் திருவாய்மலர்ந்தருளிய திருப்பணி விடைகளுஞ் செய்து போதாநின்றேன்.

அம்பலவாண நாவலர், அரசஞ்சண்முக விருத்தி அநுபபத்திப் பிரதிபத்தி யென்று ஒரு புத்தகம் வெளியிட்டிருக்கின்றார். அதனை அச்சிடு முன்னர் மஹாசந்நிதானத்தில் அவர் வாசித்துக்காட்டினாரா? மஹா சந்நிதானத்தின் திருவுளக்குறிப்பின்வழி அவர் அதனை அச்சிடுவித்தாரா? அதனை அச்சிட மஹாசந்நிதானத்தின் அநுமதியுண்டா? என்ற இவற்றைத்தெரிந்துகொள்ளப் பேரவாவுடையேனாகின்றேன். ஆதலாலவற்றைக் குறித்துத் திருமுகங் கட்டளையிட்டருளப் பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம் அடிமை

சண்முகன்

சோழவந்தான். 1—4—13.

இங்ஙனம் யாமெழுதிய விண்ணப்பப்பத்திரத்தை நோக்கிய ஸ்ரீலஸ்ரீ மஹாசந்நிதானத்திலிருந்து எமக்கு வந்த திருவருட்செல்வத் திருமுகத்தையும் இதனடியில் விளக்கிக்காட்டுதும். அது வருமாறு:—

உ
சிவமயம்.

மஹா புருஷசெல்வச் சிரஞ்சீவி நமது வித்துவான் சண்முகம் பிள்ளையவர்கட்குச சிவஞானமுந் தீர்க்காயுளும் அரோகதிட காத்திரமும் உண்டாகவெனவ ஆசீர்வாதம்.

தாங்களனுப்பிய விண்ணப்பம் கிடைத்தது. அம்பலவாண நாவலரவர்கள் அரசஞ் சண்முக விருத்தி அநுபபத்திப்பிரதிபத்தியென்ற புத்தகத்தை அச்சியற்றுமுன் நமது முன்னிலையில் வாசித்துக்காட்டவில்லை. அச்சிடுமாறு நாம் அனுமதிகொடுக்கவுமில்லை. தாங்கள் வெளிப்படுத்திய சண்முகவிருத்தியில் சிவஞான யோகிகளைப்பற்றிய தூஷணையிருக்குமானால் அவற்றை மறுப்பது நமக்கு உசிதமென்று நாம் நாவலரவர்களிடத்தில் சம்பாஷித்ததுண்டு.

(ஒப்பம்) ஸ்ரீஞானசம்பந்ததேசிகர்.
5—4—14.

என்பதே. இந்தத் திருமுகத்தால் "மஹாசந்நிதானத்தில் திருவுளக்குறிப்பின் வழி" என வெளிப்படுத்திய அம்பலவாண நாவலரது அண்டப்புரட்டு வெளியாயிற்றன்றே. இத்தகைய பொய் வேடங்காட்டும் புரட்டுநாவலர் சிறிதேனும் பழிபாவங்கட்கு நாணாது யாம் புரட்டுச் செய்தேமென்று வாய்திறந்தனரே. இனி இவரது அண்டப்புரட்டை வெளியிட்டேமாகலின் 'நாவலரே நீர் இங்ஙனம் புரட்டுச்செய்யலாமா' என்று இளைஞரும் கடாவி இவர் வாயடங்கச் செய்வரென்க.

இனி இந்நாவலரது அறிவின்மைப் பொதியுள்ளுமொரு சிறிது விளக்குதும். "மஹாசந்நிதானத்தில் திருவுளக்குறிப்பின் வழி" என்று பொறித்துள்ளார் நாவலர்; இங்கே சந்நிதானத்தில் என்றது என்ன வேற்றுமை? இடப்பொருள் பயவாமையின் ஏழாம் வேற்றுமையின்றும். நீங்கலொப்பெல்லையேதுப் பொருள்களிலொன்றும் பெறுமையின் ஐந்தாம் வேற்றுமையு மின்றும். உருபுமயக்கமென்னின் இச்சிறிய வாக்கியத்தில் மயக்கம் புணர்தற்கு அவசியமின்றுதலுடன் முறையுமின்றும். ஆகவே, ஆறும்வேற்றுமைப்

பொருள்தருமாறு "சந்நிதானத்தின்" என எழுத அரியாக இந்நாவலரின் மதிமயக்கமே இதற்குப் பொருளாதல் வெள்ளிடை. சிற்றிலக்கணப்பயிற்சி செய்யும் சிறுமகாரும் இவ்வாறு பிழைபடவெழுதாரன்றே? பதப்புணர்ச்சி செய்ய விரும்பிச் சந்தி தெரியாது புகுந்து தடுமாறும் இந்த அம்பலவாணரா முதனூலாகிய தொல்காப்பிய விவகாரத்தைப் பேசத்தக்கவர்? அந்தோ பரிதாபம்!

இனி நன்னூலார் மாடக்குச் சித்திரமென்பது முதலாயமூன்றுவமையானும் அலங்காரங் கருதினரா, இன்றியமையாமை கருதினரா, அல்லது அவ்விரண்டுங் கருதினரா வென்பது கடா. யாம் அலங்காரமென்றும்.

ஈழத்தாரோ திரும்பத்திரும்ப வெள்ளரிப்பழத்துக்குப் பூண் கட்டியாங்கு நாற்பத்தெட்டுப் பக்கம்வரை வீணுரைவாரஞ்செய்து மகளிர்கரைதல்போலப் பற்பலகரைந்து அவ்விருதன்மையுங் கருதினரென்கின்றார்; அவரது வழுத்திரட்டில் 5 வது பக்கத்தில் முற்கூற்றுக்கு மாறாக அலங்காரம் கருதினரென்றுங் கூறுகின்றார். பிறனொருவன் இன்றியமையாமை மாத்திரமேயென்று கூறினுங்கூறும். எங்ஙனங்கூறினும் இக்கடாவிற்கு நன்னூலார் சொற்கொண்டு அவர் கருத்தாராய்தலே முறையாமன்றி ஈழத்தார் சொற்கொண்டாவது பிறர் சொற்கொண்டாவது அவர் கருத்தாராய்தன் முறையன்றும். இவ்வாற்றான் அவர் சொற்கொண்டே அவர் கருத்தையாராய்வாம்.

இனிச் சேற்கண் என்றாற்போன்ற தொகையுவமம் ஒருவன் கூறிற் சேல்போற் பிறழுங்கண் என்பது அவன் கருத்தோ அன்றிச் சேல்போலும் வடிவுடைய கண் என்பது அவன் கருத்தோவென்று பிறர்க்கையநிகழல் கூடும். சேல்போற் பிறழுங்கண் என்றாற்போல உவமை உவமேயம் உவமவுருபு பொதுத்தன்மை யென்பவற்றை விரித்து ஒருவன் விரியுவமைகூறின் அவன் கருத்தில் ஐயப்பாடியாவர்க்கு மின்றும். நன்னூலார் அவ்வெண்பாவிற் கூறியது தொகையுவமமாயின் யாமுரைத்த கருத்தில் ஈழத்தார்க்கும் ஈழத்தாருரைத்த கருத்தில் எமக்கும் எம்மிருவர் கருத்திற் பிறர்க்கும் ஐயப்பாடுள்ளதாகலாம்; நன்னூலார் கூறியது விரியுவமமாயின் இளஞ்சிறார்க்கும்

ஐயமின்றும். வாதமுமின்றும். இதுவே எல்லார்க்கும் ஒப்பமுடிந்த கொள்கை. இவ்வாற்ருன் நன்னூலார் தொகையுவமை கூறிஞரா விரியுவமை கூறிஞராவென்று முதற்கண் ஆராய்வாம்.

இனி "மாடக்குச் சித்திரமு மாநகர்க்குக் கோபுரமும் ஆடமை த்தோணல்லார்க்கணியும்" என்றவரை உவமைகள்; "போல்" என் பது உவம உருபு. "ஐதுரையா நின்ற" வென்பது பொதுத்தன் மை. "நாடிமுன் எந்நூற்கும் பெய்துரையா வைத்தார் பெரிது" என்பன பொதுத்தனமை விளக்கமும் பயனுமாம். இவ்வாற்ருன் இது விரியுவமையென்பது தேற்றம். இனி இவ்விரியுவமத்தில் உவமமும் உவமஉருபும் நன்னூலார் கருத்தாராய்தற்கு வேண்டப் படாமையின் அவற்றை விடுத்து "நாடிமுன்" என்பது முதலாய உத்தரபாகத்தைக்கொண்டு அவர் கருத்தாராயப்புகுவாம்.

இனி நன்னூலார் உவமைக்கும் உவமேயத்துக்கு முள்ள பொதுத் தன்மையை விரிக்குமிடத்து ஐதுரையா நின்ற வென்ருர். இத ன்கண் ஐதுஎன்ற சொற்பொருளாராய்வாம். ஐது அழகிது என் றுரைப்பின் ஐதுரையா நின்ற அணிந்துரை யென்புழி அணிந்து ரையும் அப்பொருளே பயத்தலிற் பொருட் சிறப்பின்றும். அதுவே பொருளெனினும் அழகிது அணியாதலே யுணர்த்தலன்றி இன்றி யமையாமையை யுணர்த்தாமையுங் காண்க. ஐது என்பதன்கண் நன் னூலார் கருத்துத்தான் யாதோவெனின் அவர் தொல்காப்பியங்கற் றுத் தேர்ந்த பெரும்புலவராதலின் ஆசிரியர் தொல்காப்பியனர் " ஐ வியப்பாகும்" என்றமையால் வியப்பினைக்கருதினு ரென்பதே தேற்றமாம். இவ்வாற்ருற் சித்திரமுங் கோபுரமும் அணியும் போல வியப்பைத் தருகின்ற அணிந்துரை யென்பதே பொருளா யிற்று. இதனல் இன்றியமையாமை பெறப்படாமை காண்க.

இனி நன்னூலார் சித்திரமுங் கோபுரமும் அணியும்போல உ ரையாநின்ற பாயிரமென்ருவது புறவுரை யென்ருவது முகவுரை யென்ருவது பொதுச்சிறப்பென்னும் இருவகைப்பாயிரத்துக்கும் பொதுவாகிய பெயர் கூருது பொதுப்பாயிரத்துக்கேயுரிய சிறப்புப் பெயராகிய அணிந்துரை யென்னும் சொல்லே கூறினமையால் நன் னூலார் பொதுப்பாயிரத் தன்மையாகிய அலங்காரத்திற்கேயுவமை

கூறினாரன்றி இன்றியமையாமைக் கன்றென்பது பெறப்பட்டது. நக்கீரனாரும் இளம்பூரணருங் கூறியவுரை மேற்காட்டினுமாதலின் அதுகொண்டு அணிந்துரையென்பது அணிமாத்திர முணர்த்தும் பொதுப்பாயிரத்துக்கே யுரிமையாதலன்றி, அணியும் இன்றியமையாமையு முணர்த்துஞ் சிறப்புப்பாயிரத்துக் குரிமை யாகாமை காண்க.

இனி அணிந்துரையை எந்நூற்கும் பெய்துரையா வைத்தாரென்றலை யாராய்வாம். எந்நூற்கு மென்றது எல்லா நூன்முகத்து முரைக்கப்படும் அலங்கார மாதற் சிறப்பினையுடைய பொதுப்பாயிரத் தன்மை யுணர்த்துமன்றி ஒரு நூற்கே யுரிமையுடைய இன்றியமையாததாகிய சிறப்புப்பாயிரத்தன்மையை யுணர்த்தாதென்பது மேற்காட்டிய நக்கீரனாருரையானும் இளம்பூரணருரையானு மறிக.

இனிப்பெய்துரை யென்றலை யாராய்வாம். சிறப்புப்பாயிரத்தில் நுதலிய பொருளும் பயனு முதலாயின அந்நூலிற் சொல்லிய பொருளே யன்றிப் பிறிதொரு நூலிலிருந்தெடுத்துப் பெய்துரைக்கப் படுவனவல்ல. எல்லை முதலாய பொருள்களே பெய்துரைக்கப்படுவன. இவ்வாற்றாற் சிறப்புப்பாயிரம் பெய்துரைக்கப்படாமையும் பெய்துரைக்கப் படுதலுமென ஈரியல்புமுடைத்து. பொதுப்பாயிரமோ "ஈவோன்றன்மை ஈதலியல்பே கொள்வோன்றன்மை கோடன்மரபே" என்ற பெய்துரைக்கப்படும் பொருளை கூறலிற் பொதுப்பாயிரமே பெய்துரைக்கப்படும் ஓரியல்புடைத்து. இவ்வாற்றான் எந்நூற்கும் பெய்துரையா வைத்தாரென்றலை யாராயின் அதுவும் பொதுவின் றன்மையாகிய அலங்கார மாதலை யுணர்த்தலன்றிச் சிறப்பின்றன்மையாகிய இன்றியமையாமையை யுணர்த்தாமை கண்டுகொள்க.

இனி வைத்தாரென்றலை யாராய்வாம். சிறப்புப்பாயிரத்தன்மை கருத்தாயின் அப்பாயிரம் ஒருவனூற்குப் பிறனொருவன் பாடல் வேண்டுமாதலிற் பாடினார் பாடுவார் செய்தார் செய்வார் இயற்றினார் இயற்றுவா ரென்றற் றொடக்கத்துச் சொல்லான் முடித்தல் வேண்டும். அங்ஙனமின்றி எந்நூற்கும் வைத்தாரென்றமையால் ஒரு

நூலிலிருந்து மற்றை நூலெல்லாவற்றிற்கும் பொதுவாக வைக்கப்படுவதாகிய பொதுப்பாயிரத்தை யுணர்த்தலே கருத்தாதல் கண்டுகொள்க.

இனி வைத்தார் பெரிது என்றலையாராய்வாம். விரிந்த நூலிற் காண்க வென்னுங் கருத்தாற் பொதுப்பாயிரம் உரையானுஞ் சொல்லப்படாமற் சிறப்புப்பாயிரத்தொடு மாத்திரங் காணப்படுகின்ற இலக்கணக் கொத்து முதலிய சுருக்க நூல்களுமுண்மையின் அக்கருத்துப்பற்றிப் பெரிது வைத்தாரென்பது சிறிது வையாமையு முண்டு என்னும் பொருள் பயத்தலால் அது நூல்களுக்குத் தனித்தனி இன்றியமையாச் சிறப்பிற்றாகி வேறு வேறாக நூலொடு கூடியே நிற்கின்ற சிறப்புப்பாயிரத் தன்மை யுணர்த்தாமையும், எல்லா நூல்களுக்கும் அலங்கார மாதற் சிறப்பிற்றாகி வேறுபாடின்றி யொருதன்மைத்தாகிப்பல நூலொடு கூடியும் சிலநூலொடு கூடாமலும் எல்லா நூற்கும் பொதுவாக நிற்கின்ற பொதுப்பாயிரத்தன்மையே யுணர்த்தலுந் துணிபாதல் காண்க.

இனி நாடி முன்வைத்தாரென்றலை யாராய்வாம். இருவகைப் பாயிரத் தன்மையும் நன்னூலார் கருத்தாயின் முன்வைத்தாரென்ற மாத்திரையானே நூற்கு முன்வைப்பது பாயிரமென்பது தானே போதரும்; அங்ஙனமாகவும் நாடி யென்றது மிகையாம். முகவுரை நூன்முகம் என்று முதற்கட்கிளந்தமையானே இருவகைப் பாயிரமு முன்வைக்கப்படுவன வென்றுபோதரலின் அவற்றுள்ளும் யாது முன்வைக்கப்படுவது என்னுங் கடாவை யிறுத்தற்பொருட்டு அவ்விரு பாயிரத்துள்ளும் ஆராய்ந்து பொதுவையே முன்வைத்தா ரென்றமையான் மிகையாகாமையும் ஈழத்தார்க் கநுகூல மின்மையு முணர்க.

இனி மாடக்குச் சித்திரமும் என்பது முதலாய மூன்றுவமையானும் நன்னூலார் கருதியது பொதுப்பாயிரத் தன்மையாகிய அலங்கார மாத லொன்றே யன்றிச் சிறப்புப் பாயிரத் தன்மையாகிய அணியொடு கூடிய இன்றியமையாமை யன்றெனலே மேலுரைத்த பலவகை ஏதுக்களி லொன்று கொண்டாயினும் பலகொண்டாயினும் கடைப்பிடிக்க. அதன்மேலும் வாய்திறந்தால் என்னுங்

திறவாமற் செய்யவல்ல உயர்நூற் பிரமாணப் பூட்டு அளவில்லாதன பின்னுங் கிளம்பு மென்க.

இவ்வாற்றான் அநுவாத முறைபற்றிவகாரம் விரித்தமையும், நன்னூலார்உவமைபால் இன்றியமையாமைகருதில ரென்றமையும் குற்றமாகாமை நாட்டப்படலின். ஈழத்தார் வாய்திறந்து வெளியிட்ட பெரும் புரட்டும் இந்திரசாலமும் மயக்கவலியும் அபவாதமும் பிறவும் அவர்க்கே யுரிமையானவாறும் வாதத்துக்குத் தினைத்துணையும் வேண்டாத இத்தனை வசையும் அவர்கொண்டு உருச்செபித்தலான் அவரதியற்கை யமைதியின் பெற்றியுங் கண்கூடாதல் காண்க. தொல்காப்பியப் பாயிர விருத்தியில் நூற்றுக் கணக்கிலுள்ள பல மேற்கோளில் இனி முன்னோர் கூறிய உவமத் தியல்புணராது என்றற்றொடக்கத்துச் சில வரிகளானமைந்த ஒருமேற்கோளைமாத்திர மறுக்கத் துணிந்து அது வெளிவந்த காலமுதல் எண்பது திங்கள் வரை நாற்பத்தெட்டுப் பக்கம் எழுதியுமுற்றாமை கண்டு வைத்தும் ஆசை வெட்கமறியாது என்றபழமொழிப்படி அக்குறை பாட்டை வெளியிடற்கு நாணாராய் அழுக்காறு கொண்டோ தாம் இது பொழுது கொழும்புக்குச் சென்ற விருத்திக்குச் சகாயமென்று கருதியோ பிறிதொன்று கொண்டோ அவர் பழிப்புணர்ச்சிகொண்டே முதலையுடைய அம்முற்றாவிடயத்தை வெளியிட்டனர். அவர் நீண்டெழுதிய வனைத்தும் ஈண்டெழுதியவற்று ளொருகூற்றானே மறுக்கப் பட்டனவாயினும் இளைஞர் பொருட்டுப் பின்னும் விரித்தெழுதப்படும்.

இனி முன்னூலார் எங்ஙனம் கூறினும் அங்ஙனமே கொள்ளல் வேண்டும்; அவ்வாறின்றி முன்னூலாரோ டொத்த நன்னூலார் கொள்கையை மறுத்தமையாற் பெரும் புரட்டன்றோ வெனின்,

பிறன் கோண் மறுத்தல் தொல்லாசிரியர் வழக்கே யாதலானும் நன்னூலாரும் எழுவகை மதமே யென்னுஞ் சூத்திரத்தில் மறுத்தலும் பிறர் நூற் குற்றங்காட்டலும் நூலிலக்கண மென உடன் பட்டாராகலானும் அங்ஙனமே இளம் பூரணவடிகளைச் சேனவரையரும் அவ்விருவரை நச்சினார்க்கினியரும் அம்மூவரைச் சிவஞான முனிவரும் தொல்காப்பியவுரைக்கண் மறுக்கின்றாராகலானும் வட-

நூலினும் ஆசிரியர் பாணினியாரை வரருசியாரும் அவ்விருவரைப் பதஞ்சலியாரும் ஒரோ வழி மறுத்தாரென்று சிவஞான முனிவர் கூறுகின்றாராகலானும் அங்ஙனமே ஒருவரை யொருவர் மறுத்தல் பற்றி அன்னோரைப் பெரும்புரட்டைச் செய்தன ரென்று உலகங் கூறுமையானும் யாவர்க்கும் தங்கருத்தை வெளியிடற்குச் சுதந்திர முண்மையானும் "அரியகற்று சற்றார் கண்ணுந் தெரியுங்கா லின்மை யரிதே வெளிறு" என்பவாகலின் அக்கருத்துத் தமக்குடன் பாடன்றெனின் அதனை மறுத்தல் கூடுமன்றி அதுபற்றி அவரை மேலோர் நிந்தியாராகலானும் பண்டு தொட்டு வந்த இலக்கண மரபுபற்றி எமது விருத்தியிற் பிறர் கொள்கை மறுக்கப்பட்டனவன்றி ஒருவரையும் தினைத்துணையும் யாம் நிந்தித்தேமல்லேம் என்பதூஉம் பிறன் கோண்மறுத்தல் நியாய மென்பதூஉம் அம்மறுப்புத் தமக்குடன் பாடன்றாயின் அதனை அநுவதித்து மறுத்தலே நியாய மன்றிப் பழித்தல் அவர்க்கே பழியாமென்பதூஉங் கண்டு கொள்க.

இன்னும் எமது விருத்தியிற் பிறன்கோண் மறுத்தல் நூற்றுக் கணக்கி லிருப்பவும் அவற்று ளொன்றை மாத்திரம் அநுவதித்து வாதமுற்றுப்பெறுமுன்னரே அதுகொண்டு எமது விருத்தி பொய்யுரை யெனவும் பெரும் புரட்டெனவுங் கூறுகின்றார். இக்கூற்று எவ்வளவி லுண்மையென ஆராய்வாம்.

அவர் பழிப் புணர்ச்சி கொண்டெழுதலை யுடைய அவ்வொரே விடயம் அவர்க்குச் சாதகமாகவே முடியினும் அதுபற்றி எமது விருத்தியைப் பொய்புரை யெனக் கற்றோர் விலக்குதல் கூடுமோ? கூடாது. என்னை? இளம்பூரணம் நச்சினார்க்கினியம் சேனாவரையம் முதலாயினவற்றுட் சிற்சில மறுக்கப்படினும் அதுபற்றி அவை பொய்யுரையென விலக்கப் படாமையாலெனக.

இனி இளம்பூரண முதலியவற்றுள் அன்னோர் சொல்லியவேயநுவதித்து மறுக்கப்பட்டன. அங்ஙனமன்றிச் சண்முகவிருத்தியில் நன்னூலார் சொல்லாததொன்று அநுவதித்து மறுக்கப்பட்டதென்று கருதிப் பெரும்புரட்டெனக் கூறினாமெனின், சொற்கள் சிற்சிலவிடங்களிற் பல்பொருள் பயந்து நிற்றலானும் மயங்கலான்மவியற்கையாகலானும் அதுபற்றிப் பிறன் கருத்தறியாது ஒரோ

வழிக்கூறினும் அதுமாத்திரந்தள்ளி ஏனைய கொள்ளல் சான்றோர் கடனுமன்றிப் பெரும்புரட்டெனல் கூடாது; கூடுமெனின், இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் ஆபிடையென்பதன்கண் தனித்து நின்று பொருளுணர்த்து மாற்றலுடைய அவ் என்னும் வகரவீற்றுச் சுட்டுப்பெயரை ஆகுபெயரெனக்கொண்டு "அவ்வென்றதாகுபெயரான்" என்றெழுதியிருப்ப அதனை அவர்கருத்துப்படி "அவ்" என்றது எனப்பதப்பிரிவு செய்யாது "அ" என்றது எனத்தாமே பிறிதொரு வகையாற் பதப்பிரிவு செய்துகொண்டு தனித்துநின்று பொருளுணர்த்தாத அகரச்சுட்டை இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் ஆகுபெயரென்றாரென்றும், அவற்றுக்குள்ளென உருபு விரித்திடர்ப்படுபவென்றும் சிவஞானமுனிவர் அவ்விருவருஞ் சொல்லாததொன்றைச் சொல்லி மறுத்தலின் அதுபற்றிச் சிவஞானமுனிவரையும் ஈழத்தார் நிந்தித்தமை பெறப்படலான் அவ்வீழத்தார் பின்னும் பழிபாவங்கட்குள்ளாவாரென்க.

இனி ஆசிரியரகத்தியனார் தொல்காப்பியனார் வள்ளுவனார் நக்கீரனார் முதலாய சிலரேயன்றி ஏனைநூலுரை போதகாசிரியர் மூவரும் முக்குணவயத்தான் முறைமறந்துரைத்த லான்மவியற்கையாதலானும், அதுபற்றிபொரோவழிமயங்கின் அதுமாத்திரங்களையப்படுமன்றி முற்றுங்களைதல் கூடாமையானும், எப்பொருள் யார்யார்வாய்க்கேட்பினு மப்பொருள் மெய்ப்பொருள் காண்பதேயறிவாகலானும், ஒருவர் பல கூறின் ஒவ்வொன்றும் ஆராய்தலே முறையாமன்றி அவற்றுளொன்று கொண்டு ஏனைய தள்ளலாவது கொள்ளலாவது நியாயமன்றாம். இவ்வாற்றான் எமது விருத்தியிலும் முற்றுமாராய்ந்து தள்ளுவனதள்ளிக் கொள்ளுவன கொள்ளலே கற்றறிந்தமேலோர் கடன். பண்டுதொட்டுவந்த மரபும் இதுவே. இதனை விடுத்து எமது மேற்கோள் பலவற்றுள் ஒன்றனைமாத்திர மாராயப்புக்கு அது முடிவுறுமுன்னரே எமது விருத்தியைப் பொய்யுரையென்றே விலக்கப்படுமென்று ஈழத்தார் வாய்ப்பறைசாற்றித் திரிவது கற்றோர் செயலோ மற்றோர் செயலோ, இற்றெனப்பேதையாருணராராயினு மேதையாருணர்வாரென்க.

இனி "அவ்வெண்பாவில் நூற்கணிந்துரையாவதே பாயிரமெனத் தேற்றேகாரமேனும் பிரிநிலையேகாரமேனும் கொடுத்துத்தா

அணிந்துரையாவதே பாயிரமெனக்காட்டுதற்குரிய எவ்விதப்புணர்ப்பையுஞ்செய்து தான் நன்னூலார் சொன்னதேயில்லை" யெனவும், "பாயிரம் அணிந்துரையாதற்றன்மையை முன் பொதுவகையால் ஒருதரஞ் சொல்லியதோடமையாது அணிந்துரையை எந்நூற்கும் பெய்துரையாவைத்தார் பெரிது என்று சிறப்புவகையாற் புநர்விதாநஞ் செய்ததே அவர் சொல்லியவாறென்க" எனவுங்கூறினர்.

இதற்கு மறுப்பு முன்னரே பெறப்பட்டதாயினும் இளைஞர்க்கு விளங்கும்பொருட்டுப் பின்னுமுரைக்கின்றும். உவமைக்கும் உவமேயத்துக்கும் உள்ள பொதுத்தன்மை கூறுமிடத்து இன்றியமையாமை காட்டுதற்குரிய பொதுத்தன்மை கூறுமலும், உவமேயங் கூறுமிடத்து இன்றியமையாமை காட்டுதற்குரிய சிறப்புப் பெயரேனும் பாயிரம் முகவுரை புறவுரை என்றாற்போன்ற பொதுப்பெயரேனுங் கூறுமலும், சித்திரமுங் கோபுரமும் அணியும்போல ஐதுரையாநின்றவென்று அலங்காரமாதலைக்குறித்த பொதுத்தன்மையையே விரித்துப் பொதுப்பாயிரத்தைக் குறிக்கின்ற அணிந்துரையென்னும் பெயரையே கூறினமையானும், எந்நூற்கும் பெய்துரையாவைத்தாரென்பது ஒரு நூற்கே யின்றியமையாச் சிறப்பிற்றாகிய சிறப்புப்பாயிரத்தை விலக்கி எல்லாநூற்கும் அலங்காரமாதற் சிறப்பிற்றாகிப் பொதுவாகப் பெய்து வைக்கப்படுகின்ற பொதுப்பாயிரத்தையே குறித்தலானும் மாடக்குச் சித்திரமென்பது முதலாய மூன்றுவமையானும் பெறப்பட்டது பொதுப்பாயிரத்தன்மையாகிய அணியேயன்றிச் சிறப்புப்பாயிரத் தன்மையாகிய இன்றியமையாமை யாகாமையானும் யாங்கூறியதே நன்னூலார் கருத்தெனக் கடைப்பிடிக்க.

இனி நன்னூலார் "ஆயிரமுகத்தானகன்றதாயினும் பாயிரமில்லது பனுவலன்றே" என்ற முன்னோர் சூத்திரத்தைத்தாமு மேற்கோடலாற் சிறப்புப்பாயிரத்தன்மையாகிய இன்றியமையாமையுமுடன் பட்டாராலோவெனின், நன்னூலார் உவமைகூறுங்கால் முன்னோர்போல அணிக்கும் இன்றியமையாமைக்கும் உவமை கூறுது அணியாதற்கே உவமைகூறி இன்றியமையாமைக்கு உவமைகூறிற்றிலரென்பதே "உவமத்தியல்புணராது" என்றதன் கருத்தாமன்றி

"ஆயிரமுகத்தானகன்றதாயினு"மென்றசூத்திரத்தால் இன்றியமையாமையு முடன்பட்டாரென்பதன்கண் எமக்கும் ஆசங்கையில்லையென்க.

இனி மாடக்குச் சித்திரமென்பது முதலாயவுவமைகள் இன்றியமையாமை யுணர்ந்தாமை முன்னரேவிளக்கினும். இதுவேயன்றி அவ்வுவமைகள் இன்றியமையாமையை யுணர்த்துமென்று பேழைவாய்திறந்து ஆரவாரித்தெழுந்த ஈழத்தார் தாமும் தமது ஓரே விடயப் பிரதிபத்தியில் 5-வது பக்கத்தில் 4, 5-வது வரிகளில் நன்னூலார் ஆயிரமுகத்தானென்னும் 54-வது சூத்திரத்தால் பாயிரத்தின் இன்றியமையாச் சிறப்புடைமையை வலியுறுத்தினரென்றும், மாடக்குச் சித்திரமென்னும் 55-வது சூத்திரத்தால் பாயிரமணிந்துரையாதற்றன்மையை வலியுறுத்தினரென்றும் முன்னொடு பின் மாறுகொளக்கூறி எமது மேற்கோளையே யுடன்பட்டார். அந்தோ பரிதாபம். பிறன்கோளிது இதனைமறுத்தற்குப் பிரமாணமிதுவென்றும், தன்கோளிது. இதனை நாட்டுதற்குப் பிரமாணமிதுவென்றும் அறியாது எமது கொள்கையை மறுப்பதாகவெண்ணிப் பலபிதற்றி இடையிடை எமது கொள்கையையே தாமுமுடன்பட்டுத் தோல்வித்தானமுறுகின்றார். சீச்சீ: இத்தகையாரோ டென்னவாதம்? வென்றாலுந் தோற்றாலும் பெருமையின்றே. அவர் மேற்கொண்ட ஓரே விஷயம் யாமறுக்கும்வரையாவது நில்லாது அவருரையானே மறுக்கப்பட்டமையான் அவரது கல்வியேற்றம் நன்கு விளங்குகின்றது. அவர் கேட்டார்க் கபவாதம்போற் கிளந்து பிணிக்கவல்ல ஒரு வித வைதலேயன்று மறைந்தொழுகும் பழிப்புணர்ச்சிகொண்டு இத்தகைய அபவாத வுணர்ச்சியால் இங்ஙனம் தாம் கொண்ட மேற்கோளையு மறந்து எமது மேற்கோளையுடன்பட்டுத் தமது தோல்வியையு மறியாதே பின்னுங் கதறுகின்றார். இவ்வறியாரோடு எமக்கென்ன பேச்சென்றிருப்பினும் இருக்கவிடாது அவரொடு வாதிக்குமாறு தூண்டிய வூழையாம்வெறுக்கின்றேம். இனி,சித்திர முதலாயின இன்றியமையாமையை யுணர்த்திலவெனவுமீழத்தார்கொண்டாரென்றுமேற்கிளர்ந் தவற்றுற் பெறப்பட்டும் "பின்னும் ஆயிரமுகத்தானென்னும் நன்னூலாரது பூர்வ சூத்திரத்தை ஏனோவுற்று நோக்கில"வென்று தொடங்கி "அப்போது இவர் கண்ணுனது எங்கே போய் எதைப்பற்

றியதோ" வென்றும் "மோசம்" என்றும் "அபூதகர்ப்பந" மென்று ம் பற்பல வசைமொழிக்குப்பையை வாரியிறைக்கின்றார்.

இல்லறத்தார்க்கு ஐம்புல நுகர்ச்சியுண்மையிற் கண்ணுனது செல்லுமிடனெல்லாஞ் செல்லலும் பற்றுமிடனெல்லாம் பற்றலும் அமையும்: ஏனையோர்க்கு எவ்வாற்றானு மமையாதே. அங்ஙனமாகவும் இனி முன்னோர் கூறிய புவமத்தியல்புணராது "நன்னூலார் அணிந்துரையாவதே பாயிரமென்றார்" என்றமேற்கோளையுற்று நோக்காது அவர்கண் எங்குச்சென்று யாதுபற்றியதோ வறிகிலம். இன்றியமையாமை குறிக்கும் உவமை கூறிற்றிலரென்னுங் கடாவுக்குப்"பாயிரமில்லது பனுவலன்றே" யென்றமையால், இன்றியமையாமையுமுடன்பட்டாரென்னும் விடை எத்துணைப் பொருத்தமெனலை அவரேயுற்று நோக்கி யடங்கக்கடவர்.

இனி "அவர் பரதூடணத்துக்குக் கருவியாவான் வேண்டித்தாமே கட்டிக்கொண்டார் கொல்லோ" வென்கின்றார். இந்நாள்வரை உடன்படன்மறுத்தன் முதலாயவெழுவகைமதம்பற்றியாம் வியவகாரமாத்திரையே எழுதினுமன்றி யாரையுந்தினைத்துணையும் நிந்தித்தோமில்லை எனற்குஎம்மனமும், எம்மால் வெளிப்போந்தவுரையும், அவ்வுரையை நடுவுநிலையானாராய்ந்த அறிஞருமே சான்று. ஈழத்தாரோ நடுவுநிலைபிறழா ஆங்கிலவரசியலும் நோக்காது வாதத்துக்கு வேண்டாத பல இழி மொழிகளையே பல்லவியாகக் கொண்டுபக்கந்தோறும் வரைந்து அச்சிட்டு வெளிப்படுத்தியிருத்தலின் அதுவே அவர் பரதூடணஞ்செய்தலே தவமெனக்கொண்டு அவமே காலம்போக்கு மியல்பினரென்று காட்டுகின்றது. ஈழத்தார் கைக்கொண்டது பரதூடணமொன்று தானோ பின்னும்பலவுள.

இதற்குமுன் யாம் அவர்க்கு எவ்வகையானும் தினைத்துணைத்தீங்குஞ்செய்தேமில்லை. கனவினு மவரை நிந்தித்தேமில்லை. இது சத்தியம். இவ்வணமாகவும் யாதொரு பகையுமின்றித் தமது சுபாவ குணத்தால் எமது நாட்டார் பலரிடம் தாமே வலிதிற் சென்று அவர் வைணவராயின் சோழவந்தான் சண்முகம்பிள்ளை நாத்திகன் அவனுறவு கேடுபயக்கும், நட்பொழிகவென்றும், சைவராயின் அந்தோ அவன் கொடியன் நமது தேவார திருவாசகங்களை நிந்திக்

கின்றான், சிவஞானமுனிவரை நிந்திக்கின்றான், அவன் நட்பொழிகவென்றும், கிறித்தவராயின் அவனொழுக்கமிலானென்றும், இங்ஙனம் பல மித்திரபேதஞ் செய்து நட்டாருட் சிலரைப் பிரித்தார். எம்மோடு நெருங்கிப் பழகினோர் பலர் அவர் சொற்கேட்டிலர். இவ்வாறு அவர் சொல்லித்திரிதல் பற்றியும் யாம் கவன்றிலேம். தன் மனச்சான்றுக்கு விரோதமின்றி நடத்த லொருவற்குக்கூடுமன்றிப் பிறன் கருத்துக்கிணங்க நடித்தல்வஞ்சமேயாம். எமதுவிருத்தியில் முன்னோர் வழக்குப் பற்றிச் சிவஞானமுனிவர் முதலாயினோர் சிலர் கொள்கையைமறுத்தாம். அச்செயலால் ஈழத்தார் நாத்திகனென்றும் அடியார் பத்தியிலனென்றும் பிறவுங்கருதியிருத்தல் கூடும். அதனாலும் நமக்கோர்குறைபாடுமின்றென அவர் மித்திரபேதத்தையும் யாம் பொருட்செய்தேமில்லை. பின்னுமவர் ஒரே விடயமென்ற பிரதிபத்தியில் வெளிப்படவுந் தூற்றினார். அதுவுங் கற்றார்செயலன்மையின் அவரைப்பொருட்படுத்தேமாயினேம். அப்பிரதிபத்தியில் ஸ்ரீலஸ்ரீ திருஞான சம்பந்தசுவாமிகள் திருவுளக்குறிப்பின் வழி அப்பிரதிபத்தி அச்சிடப்பட்டதென் றெழுதினார். அது மாத்திரம் எம்மட்டும் உண்மையென வாராய்ந்தோம். தமக்கு ஈழத்தார் பிரதிபத்தியைப்பற்றி யாதொன்றுந்தெரியாதென்றும், தம் முன்னர் அது படிக்கப்படவில்லை யென்றும், அச்சிடத்தாம் அநுமதி கொடுக்கவில்லை யென்றும் ஸ்ரீலஸ்ரீ பண்டார சந்நிதியவர்கள் எமக்குத்திருமுகங் கட்டளையிட்டார்கள். தாமாக எழுதி யச்சிட்டு இங்ஙனங் கூறுவது பெருமோசமும் வஞ்சமும் பொய்யுமாயினும் அவர் தம்மெழுத்துக்கோர் மதிப்புவேண்டுமென்று கருதி அங்ஙனஞ்செய்தமையான் அதனையுங் கருதிலம். பின் எம்மைச் சார்ந்தார் சிலரை இகழ்ந்தமைகொண்டே இத்தனை தூரம் எழுதலாயிற்றென்க.

இனி முத்திறத்தருமிகளுள் எத்திறத்தருமி பாயிரமென்பதை இனியேனுமூகிக்கக்கடவரென்று தருமதருமிகளை முற்றுமுணர்ந்தார்போன்று ஈழத்தார் நடிக்கின்றார். அணியாதற் றருமமாத்திரத்தோடு கூடியது பொதுப்பாயிரமாகிய தருமியென்பதூஉம், அதனோடு இன்றியமையாமைத் தருமமுடையது சிறப்புப் பாயிரமென்பதூஉங் கற்றார்வாய்க் கேட்குமாற்றாற் கேட்டுத்தெளிக.

இனி 6 வது பக்கம் ஆதிதொடங்கி முற்றும்நிந்தையே. 7 வது பக்கமும் 8 வது பக்கம் பாதிவரையும் எவகாரவிவகாரமே. 8 வது பக்கம் பிற்பாதியும் 9, 10, 11 வது பக்கம் முற்பாதிவரையும் எமக்கும் அவர்க்கும் வேண்டாத வெற்றுரையே. அதன்மேல் 11 வதுபக்கம் கடைப்பகுதியிலிருந்து சித்திர முதலாய உவமைகளைத் தம்மனம்போனவாறே விரித்துத் தங்கருத்தே நன்னூலார் கருத்தென்று சாதிக்கின்றனர். அவர் கருத்து அவ்வெண்பாவி லின்றெனல்முன்னரே காட்டப்பட்டது.

இனி, அம்மட்டோடு நில்லாது பரதூடணமே விருதாகக்கொண்ட ஈழத்தார் அநுவாத முறை இன்னதென்பது தெரியாது நன்னூலார் மாநகரென்றதனை நகரென்றும் ஆடமைத்தோணலொரென்றதனை நல்லாரென்றும் வெறுமனே கூறினுமென்று எத்தனையெத்தனை வைகின்றார்! ஐயோ பாவம்! அவர்க்குச் செவ்வனேயெழுதுதற்கேற்ற கல்வியறிவில்லை; நடையில்லை; ஆற்றலில்லை; கற்றுணையிலக்கணமுறையால் வெல்லலரிதென்று மாத்திரமுணர்வார். பின் என் செய்வார்? அடுத்தடுத்துவையின் மானத்துக் கஞ்சியேனும் நல்லோரொதுங்குவாரென்று நினைத்தே தாங்கொண்ட மேற்கோளை விடுத்துப் பக்கந்தோறும் வசைமொழிப் பல்லவியைத் தாளம் விடாது பாடுகின்றார். அவர் அவ்வளவின் மகிழ்க. "சையறியாமாக்களிழிப்பும் எடுத்தேத்தும் வையார் வடித்த நூலா"ராகலின் அவர் வசையை யாங்கருதிலம். அப்பாற் செல்வாம்.

இனி, முன்னர் மாநகரென்றும் ஆடமைத்தோணல்லாரென்றும் அநுவதித்துப் பின்னர் அவற்றைச் சொற்சுருக்குதற் பொருட்டு நகரென்றும் நல்லாரென்றுங் கூறின் எங்ஙனம் அநுவாத முறை பிறழும்? "பூர்வகண்டத்தில் அநுவாதம் பெறப்பட்டதென்பாராயின் உத்தரகண்டத்தில் அது பெறப்பட வேண்டுழிப் பெறப்படாமையின் அது பொருந்ாதென்று மறுக்க" வென்றும் கூறுகின்றார். உத்தரகண்டத்திற் பெறப்பட வேண்டுமிடம் யாது? அது பெறப்படவேண்டா விடம் யாது? இவ்விலக்கண மெந்நூலிலுள்ளது? யாதானுமொரு நூற்பிரமாணமின்றித் தம்மனம் போனவாறே தாமுஞ் சென்று வீணாச்சிரமங் கொண்டு தமது

ஓரோ விஷயப் பிரதிபத்தியின் மயங்கித் தப்பறைகின்றார். பிரமாண மின்றி யறையு மீழத்தார் தப்பினைக் கல்லாருமதியாரன்றோ?

இனிச் 'சித்திரமில்வழியு மாட மெனவுங் கோபுரமில்வழியு நக ரெனவும் அணியில்வழியு நல்லாரெனவுங் கூறின் இழுக்கின்றாயினாற் போல,' என்றலையாசங்கித்து, ஈழத்தார் பலபல வாக்குரைக்கின் றார். அவர் எவ்வாறுரைப்பினுமுரைக்க. நன்னூலா ரக்கருத்தின ரல்லரெனலை முன்னரே காட்டினும். "சித்திரமில்லது சிறுகுடி சிற் றிலெனப்படும்; மாட மெனப்படாது." எனவும், "கோபுரமில்லது கிளைநகர் ஊர் பாடி குறிச்சி எனப்படும்; மாநகரெனப்படா" தென வும், அணியில்லார் நல்லார் மகளிர் அரிவையர் எனப்படுவாரன்றி ஆடமைத்தோணல்லா ரெனப்படாரெனவும், பிறவு முரைக்கின்றார். மாடமுதலாயவற்றுக்குச்சித்திரமுதலாயவையமையின் முன்னையினு மணிசெயன் மாத்திரையே யன்றி இன்றியமையாமை என்பது அமையாது. அவரும் சித்திர முதலாயின வில்வழிமாடமுதலாயின வாகா வென அரங்கின்றிவட்டாடிப் பலகூறினாரன்றிப் பிரமாணங் கூறினாரில்லை. அம்மட்டோ? இனிச்சித்திர மில்லது மாடமெனப்படு வது ஓரோவழியுலகின்கண் இல்லையோவெனின் "ஏகதேச விகிர்தம் அநந்நியமா மென்னும் வழக்கு" என்கின்றார். அந்தோ பரிதாபம்!

ஈண்டுவமைகளா வின்றியமையாமை நாட்டப் பகீரதப் பிரய த்தனஞ் செய்கின்ற அவர் தாமே 5வது பக்கத்தில் நன்னூலார் மாடக்குச் சித்திரமென்னும் 55-வது சூத்திரத்தால் பாயிரம் அணி ந்துரையாதற் றன்மையை வலியுறுத்தினரென்றார். முன்னர்ச் சித் திரமில்லது மாடமன்று, சிற்றில் முதலாயபெயர் பெறுமென் றும், கோபுர மில்லது மாநகரன்று குறிச்சி முதலாய் பெயர் பெறு மென்றும், அணியில்லார் ஆடமைத்தோணல்லார் ஆகார்; மகளிர் முத லாய.பெயர் பெறுவர், என்று மறைந்த அவர் தாமே, சித்திரமில் லது மாடமெனப்படுவது ஓரோவழியுண்டென்றும், அஃது ஏக தேச விகிர்தம் அநந்நியமா மென்னும் வழக்கென்றும் முன்னொடு பின் மாறுபடக் கூறி யொருநெறிப்படாராயினர்.

இனிச்சித்திரமின்றி இரண்டடுக்கு மூன்றடுக்குள்ள பல மாடங் க்கள் தற்காலதுமுள்ளன. அவை இனி ஈழத்தார் கருத்தின்படி

சிறுகுடி சிற்றிலெனப்படும் போலும். இங்ஙனம், காண்டல் விரோதங் கண்டே ஈழத்தார் ஏகதேசவிகிர்தம் அநந்நியமாமென்கின்றார். ஏ! ஏ! ஈதென்னை பாவம்! நன்னூலார் சித்திரமுங் கோபுரமும் அணியும் போல ஐதுரையா நின்ற வணிந்துறை யென்று அலங்காரமாதலொன்றையே தெளிவுபடச் சொல்லியிருப்பவும் ஈழத்தார்க்கு ஏனோ இத்தனை பேரிழுப்பு?

இனி மாடத்துக்கு இன்றியமையாமை செங்கல் மண் சாந்து மரம் முதலாயினவற்றிற் சித்திரமென்பது எவ்வாறு பொருந்தும்? சித்திரமிருப்பின் முன்னையினு மழகுடைத்தாம். இல்லாவிடத்து மாடமேயாகாதெனல் காண்டல்விரோதமே. இவ்வாறே மாநகர்க்குக் குடிகளும் மாட முதலாயவையும் இன்றியமையாதன. கோபுரமன்று. அஃதிருப்பின் முன்னையினு மழகுடைத்தாமன்றி இல்லாவழி மாநகராகாதெனல் காண்டல் விரோதமே. தற்காலத்தும் சக்கரவர்த்திகள் வசிக்கின்ற மாநகரிற் சில கோபுரமின்றியு மிருத்தலை நேரிற் கண்டாயினும் ஐயமொழிக. ஆடமைத்தோ ணல்லாரென்னுஞ் சொற்கிடக்கை நோக்கின் ஆடமை யென்பதே யண்மைநிலையாதலின் அசைகின்ற மூங்கிலெனலே நேர். முன்னோரும் அணியிழை மகளிர் என்றாரேயன்றி ஆடுகின்ற நல்லாரென்னாமை காண்க. இவ்வாறன்றி ஆடுதோளெனினும் ஆடுநல்லாரெனினும் அவையுஞ் சேய்மை நிலையாற் பொருந்தலின் வழுவெனப்படா. ஆடு அமை ஆடுதோள் ஆடுநல்லாரென்ற அம்முப்பொருளில் ஆடுநல்லாரே தம்பொருட்குச் சார்பென்று ஈழத்தார் கொண்டார். அங்ஙனங்கொண்டும் அவர்க்குப் பயனில்லை. ஆடற்றொழிலுக்காவது அத்தொழிலுடைய நல்லார்க்காவது அணி யின்றியமையாமையென்பது பொருந்தாது. அணிபுனையின் முன்னையினும் அழகு பயக்கும். ஆடலுக்குக் கைகான் முதலிய வுறுப்புக்களும் அபிநயமும் பாட்டுஞ் சதியு முதலாயினவே யின்றியமையாமை. அணியன்று. அங்ஙனமே, அந்நல்லார்க்கும் ஆடையின்றியமையாமை. அணியன்று. ஆடலாசிரியன் மகளிரை அறையி லாட்டுவிக்குங்காலை அணியின்றியு மாட்டுவித்தல் கண் கூடாம். அங்ஙனமாடுகின்ற நல்லாரை இனி ஈழத்தார் கருத்தின்படி ஆடமைத்தோ ணல்லாராகாரென்று யாரே சொல்லத்துணிவார்? அன்றியும், கூத்தியரிலக்கணங் கூறுங்காலை "ஆடலும் பா

டலும் அழகும் என்றிக்—கூறிய மூன்றின் ஒன்று குறைபடாமல்" என்றார் பெரியாருமென்க. அல்லதூஉம்,

"நன்னர் விருப்புடையோ னற்குணமு மிக்குயர்ந்தோள்
சொன்னகுலத் தாலமைந்த தொன்மையளாய்ப்—பன்னிரண்டாண்
டேய்ந்ததற்பின் ஆடலுடன் பாடலழ கிம்மூன்றும்
வாய்ந்தாங் கேற்றல் வழக்கு."

என்பதும் கற்றுணர்ந்த பெரியார் கருத்தென்க. பண்டைப் பெரும் புலவரெல்லாரும் கூத்தியருக்கு ஆடல் பாடல் அழகு என்ற மூன்றுமே இன்றியமையாதன வெனக்கொண்டு கூறியிருப்பவும் இந்த வம்பலவாண நாவலர் கூத்தியரின் ரூபாவதிக்கு நகை வகைகளும் இன்றியமையாதனவெனக் கண்டுகூறிக் களிப்படைகின்றார். இவர் கூற்று யாவர்க்கும் நகையே விளைக்குமென்பதை யினியேனும் தெரிந்து ஒழிவாராக. அல்லதூஉம் "அணியிழை மகளிரெனப்பொதுவகையானுங் கற்புடையாள்போலவெனச் சிறப்புவகையானு முதியோர் குலமகளிரைச்சொல்லிக் கூறியிருப்பதைக் கண்டும் அச்சநாணமின்றித் தம் மனம்போனவாறே சென்று தமக்குச்சார்பு கூத்தியரென்று கடைப்பிடித்துக் கொண்டாடி வெளிப்படுதல் பெரிதும் பழியாமென்பதும் தெளிக.

இதுகாறுங் கூறியவாற்றான் இந்த ஈழவம்பலவாணர் புகலிடமாகக்கொண்ட ஆடுநல்லாரது சார்பும் பெருங்காற்றி லகப்பட்டபஞ்சிபட்டபாடுபட்டுப் பறந்தொழிந்தமையின் இம்மட்டில் விடுத்து மேற்செல்வாம்.

இனி "கோபுரமில்லது நகர் மாநகர் எனப்படுவது ஒரோவழியுலகின்கணுண் டெனினும் ஏகதேசவிகிர்தம் அநந்நிய மென்னும் வழக்காற் கொள்ளப்படும்" என்றும், "அதுவேயிலக்கணமாவான் சேறலின்று. ஆதலால் இதன்கண் அவ்வியாத்தியின்மை யுணர்க" வென்றும், "இதனுற்கோபுரம் மாநகர்க்கின்றியமையாச் சிறப்பிற்றென்பது வச்சிரலேபனஞ் செய்யப்பட்ட தென்றும்" பிறவுங் கூறினார்.

என்னே இவரது தருக்கவுணர்ச்சி? ஒருவன் யானைக்கு மணியோசைபோலவென்று உவமைமொழிந்தான். அம்மொழிபுண்மைபறியா

மற்றொருவன் யானைக்கு மணியோசையே சிறப்பியல் பென்று வாதித்தான். பிறனொருவன் அவனைத் தெருட்டற் பொருட்டுக் காடு சென்று மணியின்றிச்செல்லும் யானையையுங்காட்டினன். கண்டும் ஏகதேசவிகிர்தம் அநந்நியமென்றுஅவன் தருக்கம் படித்தான் போன்று பேசுவானாயின் "உணர்ச்சி வாயிலுணர்வோர் மேற்றே" யென்று தெருட்டுவோன் அகலுமன்றோ? அங்ஙனமே யீழத்தாரது தருக்கவுணர்ச்சியுங் காணப்படுகின்றது. அவ்வியாத்தி யிலக்கணம் ஈழத்தாரிடம் என்னபாடு படுகின்றது? ஈழத்தாரது வாக்கியப்பிரமாணங்கொண்டால் இனி ஆவிற்குக்கபிலநிறமுண்மையும் அவ்வியாத்தியின்றென வாதுசெய்யப்படும். அந்நிறமின்றிப் பிறநிறமுடைய ஆவினைக்காணின் அஃதேகதேசவிகிர்தம் அநந்நியமென்று வாதிக்க யாதுதடை? இனி அதிவியாத்தியும் அசம்பவமும் அங்ஙனமே தள்ளப்படும். இவ்வுண்மையறியாதே தருக்க நூலார் அதி வியாத்தி முதலாய முக்குற்றங்கள் பகர்ந்தார்போலும். இனி எவ்வழக்குப்பற்றியோ கோபுரமின்றியும் மாநகருண்டென்று ஈழக்குடியாரே யுடன்பட்டமையால் அக்கோபுரம் இன்றியமையாமையன்று, அணியாதலேயென்று போதரல் காண்க.

இம்மட்டோ, தாயுமான சுவாமிகள் கட்டளையிட்டவாறு, வடநூல் வல்லாரிடத்துத் தமிழ்வல்லார் போன்றும் தமிழ்வல்லாரிடத்து வடமொழி வல்லார்போன்றும் எழுத்து வல்லாரிடத்துத் தருக்கத்துவல்லார்போன்றும் தருக்கம் வல்லாரிடத்து எழுத்து வல்லார் போன்றும் அனைத்தும் வல்லாரிடத்தும் ஒன்றுமறியாப்பேதைகளிடத்தும் ஞானிபோன்றும் அபிநயித்து நடித்து உலகை மயக்கிவாழ்தலும், பிறரை நிந்தித்துவாழ்தலுமே இன்னோரது தொழிலாதலின் தாம் எடுத்துக்கொண்டது தமிழிலக்கண விவகாரமென்பது தெரிந்துவைத்தும் தமிழிலக்கண நூலிலாவது உரையிலாவது வழங்கப்பெறாத அநுபபத்திப் பிரதிபத்தி என்னும் வடமொழிப் பெயர்சூட்டி இடையே பலவடசொல்லுங் கணக்காயர் பாடத்தாற் கேட்டுப் பெய்துவைத்துப் பொருளீட்டுகின்றார்.

இதுவன்றி வாதத்துக்கு வேண்டாதிருக்கவும் அவ்வியாத்தி முதலாய தருக்கநூற் பெயர்களை யாவர்பாற்கேட்டோ அடிக்கடி

வாரியிறைக்கின்றார். இவ்வாற்றான் அவர் தம்மை வடநூலினும் வல்லாரெனத் தமிழர் மதிக்கவேண்டுமென்றுநடிப்பது புலப்படும். அம்மம்ம! அவரது நடிப்பிருந்தவாறென்கொல்?

இனிவாதத்துக்கு வேண்டுவ கூறுக, இத்துணையெழுதல் வேண்டாவெனின் ஈழத்தாரிவ்வுணர்ச்சியின்றிப் பழிப்புணர்ச்சிகொண்டு கல்லாமாக்களிடைக்கலந்து மகிழ்ந்து நிந்தை கூறலையே கங்கணங்கட்டிக் கூத்தாடுகின்றார். யாம் பெரியாரை யிகழ்ந்தேமென்னும் பொய்யை வியாசமாகவைத்து யாதொரு பகையுமின்றி வாதத்துக்குவேண்டுவ சுருங்கவெழுதலறியாது மிகைபடவெழுதிய அப்பிரதிபத்தியிலும் ஒருவாற்றானும் வேண்டாத பழிப்பையே அவர் மேற் கொண்டெழுதினார். இவ்வாற்றான் யாம் இத்துணை யெழுதலின்றியமையாதாயிற்று.

இனிப் "புரத்துவாரந்து கோபுரம் என்பதநிகண்டு" என்கின்றார். அம்மேற்கோளை யாம் மறுக்கவில்லை; தமிழ்வாதத்திற் பிங்கலந்தை சூடாமணி முதலிய நிகண்டுகளைக் காட்டாது, வடமொழி நிகண்டு காட்டியது முற்கூறிய கருத்துக்கொண்டோ பிறிதொன்று கொண்டோ இற்றெனக் கற்றாரே காணக்கடவர். கோபுரமென்பது வடசொல்லாதலின் வடநூற் பிரமாணங்கூறல் வேண்டுமெனின், அது தமிழ்நூலினும் வழங்கலாற் றமிழினுங் கூறலே தக்கது. இனிச்சிகரிக்கும், சிகரியைத் தாங்கிநிற்கும் வாயிலுக்கும் கோபுரமென்பது பெயராதலைத் தமிழ்நிகண்டுகளாலும், இலக்கியங்களாலுமறிக. அவர் கூறிய பொருளை கொண்டாலும் இன்றியமையாமை யுணர்த்தாமை முன்னரே கூறினும்.

இனிக் கோபுரமெனற்குக் கோக்களாற் பெரியது எனவும், கோக்களை முன்னுய்ப்பது எனவும், அவர் பிறபொருளுங் கூறினார்.

இன்னுமவர் கோபுரத்துக்குக் கோக்கள்போலப் பாயிரத்தின் வசித்து அதற்குப் பெருமை தருவனவும், அதனால் முன்னுய்க்கப் படுவனவுமாகப் பாயிரத்திற்கு நூற்றிறன், நுவல்வோன்றிறன், நுவலுந்திறன், கொள்வோன்றிறன், கோடற்றிறனெனத் திறங்களைந்தாமென்றும், "உவமத்தின் கூறுபாட்டில் கோக்களின்பலம் கவ்வியமாதல்போலப் பொருளின் கூறுபாட்டில் நூற்றிறன் முதலாய

யைந்துதிறங்களின் பலம் ஞானமாம் என்றும், பாயிரத்திறம் நான் கல்லவெனறுப், நான்கென்பார் கொள்கை வழுவைவிட்டு ஈவோனு ம் ஈதலும் ஏற்போனும் ஏற்றலுமாக இந்நான்கு மாத்திரமுளப்ப டக் கல்யாண நிகழ்த்தினர் கொள்கையோடொன்றே பிறிதில்லை" யென்றுங் கூறினர்.

அவர் ஒரேவிடயமென மேற்கொண்டு பற்பல நுழைத்து, மற் றொன்று விரித்தற் கஞ்சினர்போன்று நடித்து "இதுவிடயம். மற் றொன்றாக ஈண்டு விரிக்கற் பாற்றன் றாகலின் வந்துழிக்காண்க" வெ ன்று நவில்கின்றார்.

வந்துழிக் காண்கவென்று பதுங்குமியல்புடைய அவர், பாயிர மைந்துவகை யென்ற தங் கோளை மாத்திரஞ் சொல்லிப்போதல் வே ண்டும்; அங்ஙனமின்றிப் பாயிரத்திறம் நான்கென்ற சான்றோர் கொ ள்கையையு மறுக்கத் துணிந்து நடித்து எமது பாயிரவிருத்தியிற் சான்றோர் கொள்கைப்படி பாயிரத்திறம் நான்கென்று நிலைநாட்டிய ஏதுக்களையும் முறையானே எடுத்து அநுவதித்து மறுத்தல் செய் யாராய்ப் "பெரும்புகழ்படைத்த மெய்யுரையாசிரியர் சிவஞான யோகிந்திரபூச்சிய பாதர்கள் தொன்னூன் முடிபெனக் கொண்டரு ளியதும், அதுவே" யென்று சொல்லிமுடித்தார். இதுவென்ன பேதைமை? ஆத்திரையன்பேராசிரியன் நக்கீரனார் முதலிய சான் றோர் கூறிய பிரமாணங்களை எவ்வாறு தள்ளுதல் கூடும்? அச்சான் றோரது கொள்கையோ டொத்தவிடத்தன்றே பிற்காலத்தவராகிய பிறர்கூற்றுப் பிரமாணமாகும்? ஒவ்வாதாயினும் பின்வந்தாருரையே கோடற்பாற்றெனின் அதற்குப் பிரமாணம் யாது? ஈழக்குடியார் பிறன்கோண் மறுத்தற்கெண்ணுவாராயின் அதற்குரிய கல்வியைத் தாமே சென்று நல்லாசிரியனிடத்துக்கற்று அக்கோள் மறுக்கப் படாதாயின் உடன்படலும், மறுக்கப்படுமியல்பிற்றாயின் நியாய வாயிலான் மறுத்தலுஞ் செய்தல்வேண்டும். அவ்வாறு கற்றற்கு இயற்கையறிவு, இளமை, நோயின்மைமுதலாய சாதனங்களமைந் தில வென்பாராயின் அவைக்களத்துவாய்திறவாது குந்தியிருந்து பெரியார் சொன்னவற்றைக் கேட்டல்வேண்டும்.

அவ்வாறு கற்றலுங் கேட்டலுஞ் செய்யாமலே பாயிரத்திறம் நான்கென்றெழுதிய நக்கீரனருரை முதலாய பிரபல பிரமாணங்களைக்கொள்ளாமலும், யாம் பாயிரவிருத்தியில் எழுதிய நியாயங்களை அநுவதித்து மறுமலும் பாயிரத்திற மைந்தேயென்னு உறுதிமொழிக்கை யொப்பமிட்டுப் பின்னுள்ளாரைப் பிரமாணங் காட்டுகின்றார். அந்தோ இவரது பக்கவாத மிருந்தவாறென்னை? இனிப்பின்னுள்ளாருரை பிரமாணமோ, ஆத்திரையன்பேராசிரியன் நக்கீரனர் முதலாய சான்றோருரை பிரமாணமோ என்றுஞ் சிறிதாராய்வாம். தொல்காப்பியத்துக்குச் சிறப்புப் பாயிரஞ்செய்த பனம்பாரனரைப்போன்று பொதுப் பாயிரங்கூறிய பழைய புலவர் பெருமானகிய ஆத்திரையன் பேராசிரியன் "வலம்புரிமுத்தின்" என்ற, பொதுப் பாயிரச்சூத்திரத்தில் "ஈவோன்றன்மை ஈதலியல்பே, கொள்வோன்றன்மை கோடன்மரபே" என்ற நான்கே கூறினன். ஐந்தாவதொன்று கூறினனில்லை.

அச்சூத்திரம் முன்னோர் பலராலும், பாயிரத்திறம் ஐந்தென நன்னூலார் கருத்தோடொப்பக் கூறும் சிவஞானமுனிவராலும் மேற்கோளாகக் கொண்டு பாராட்டப்பட்டது. அது சங்கத்தார் காலத்து வழங்கிய சூத்திரமாதலின் ஆசிரியர் அகத்தியனர் தொல்காப்பியனர் முதலாயினர்க்கும் உடன்பாடென்பது பெற்றும். இதுவன்றி நக்கீரனர் இளம்பூர்ணர் நச்சினர்க்கினியர் முதலாயினரும் நான்கென்றே கூறிப்போந்தனர். இப்பிரமாணங்களைத் தள்ளி நன்னூலார் முதலாய பின்னுள்ளார் கூற்றுக்கொண்டு ஐந்தெனல் சாலாது. சாலுமெனின் முதனூற் பொருளொடு மாறுகொண்டு மரபுநிலைதிரியிற் பிறிது பிறிதாகுமென்றபடி முடியுமென்க.

இனி, ஆத்திரையன் பேராசிரியன் நக்கீரனர் முதலாயினோர் நான்கெனக் கொள்ளினும் அதுவே ஆசிரியர் அகத்தியனர்க்கும் தொல்காப்பியனர்க்கும் உடன்பாடெனற்குத் தக்கசான்று இதுபொழுது கிட்டாமையின் பின்னுள்ளாரையே பிரமாணமாகக் கொண்டு ஐந்தெனக்கூறினேமெனின், நன்று, நன்று! அங்ஙனங் கூறியது நியாயவாயிலாகவோ, அன்றிப் பத்திவாயிலாகவோவென்பது கடா. நியாயவாயிலாகவெனின், யாம் பாயிர விருத்தியிற்

கூறிய ஏதுக்களை முறையானே அநுவதித்து மறுத்தாலன்றி ஐந்தென்றுரைப்பது பயனில் கூற்றும். பத்திவாயிலாகவெனின், ஆத்திரையன் பேராசிரியன் சரிதம், நக்கீரனார் சரிதம், பின்னுள்ளார் சரிதம், இம்மூன்றனுள், யாது சிறந்தது? அச்சரிதம்பற்றி அன்னாரைப் பிரமாணங் கோடல் வேண்டும். இவ்வாற்றான் ஆத்திரையன் பேராசிரியனைப் பற்றியாராய்வாம். தொல்காப்பியப்பொருளதிகாரம் மரபியலின்கண் "ஒத்த சூத்திரமுரைப்பின்" என்புழியும் பிறண்டும் உரையாளரெழுதியவாற்றானும், யாப்பருங்கல விருத்தியுரை முதலாயவற்றானும் ஆத்திரையன் பேராசிரியனது பெருமையும் அவன் நல்லிசைப்புலவர் பலரானும் பிரபல பிரமாண வாசிரியருள் ஒருவனாகப் பாராட்டப்பட்டமையும் இனிதுவிளக்கும்.

இனி நக்கீரனாரைப்பற்றி யாராய்வாம். அவர் பொய்யடிமையில்லாப்புலவருள் ஒருவரென்றும், கடைச்சங்கத்துப் புலவருள் தலைமைபெற்றவரென்றும், ஆலவாயெம்மண்ணலைக் கண்ணெதிரே கண்டுவாதஞ் செய்த பெருந்தவமுடையாரென்றும், திருமுருகாற்றுப்படைபாடி அறுமுகக்கடவுளநுக்கிரகம் பெற்றுப் பூதத்தை வென்று ஆயிரவருயிரைக்காத்து மீண்ட பெரும் புகழாளரென்றும், அகத்தியனாரிடங்கற்றுத் தேர்ந்த தெய்வப்புலவரென்றும், திருமுறை பாடிய சிவனடியாருள் ஒருவரென்றும், ஆலவாயின் அவிர்சடைக்கடவுள் தாமியற்றிய களவியற்குச் சங்கத்தார்கண்டவுரைகளுள் மெய்யுரையிதுவென அறுமுகக்கடவுளின் அவதாரமாகிய உருத்திரசன்மனைக் கொண்டு பெறுமினென்று கட்டளையிட்டபடி. அவ்வுருத்திரசன்மரால் நக்கீரனாருரையே பாராட்டப் பட்டதென்றும், சங்கத்தாரும் மெய்யுரை பெற்றுமென்று அவ்வுரையே கொண்டாரென்றும், திருத்தொண்டர்புராணந் திருவிளையாடற்புராணம் சீகாளத்தி, திருப்பரங்குன்ற முதலான தலபுராணங்கள் முதலிய நூல்கள் உரைகள் அருணகிரிநாதர் திருப்புகழ் முதலாயின பாக்கள் வெளியிடலானும், நம்பியாண்டார் நம்பிகள் இப்பெரியார் பாசுரங்களைப் பதினொராந்திருமுறையிற் சேர்த்துப் பாராட்டினமையானும், இன்னும், நக்கீரனார் இறைவனாலயத்துண் மாத்திரமன்றி விக்கிரகரூபமாகத் தனித்துங் கோயில்கொண் டெழுந்தருளியிருத்தலானும் அவ்விக்கிரக வுருவத்தைத இறைவனைப்பூசித்தற்குரிய ஆதிசைவரே

பூசித்து வருதலானும் அவரது பெருமையும் புலமையும் இனிது விளங்கும். இன்னுந் தொல்காப்பியச் செய்யுளியலில் மந்திரச்சூத்திர வுரையால் நக்கிரனார் நிறைமொழிமாந்தருள் ஒருவராதலுந் தெளிக.

இந்நக்கீரரது வரலாற்றின் முற்பகுதி "நன்பாட்டுப் புலவனைச் சங்கமேறி நற்கனகக் கிழிதருமிக்கருளினோன் காண்" எனத் திருப்புத்தூர்ப் பதிகத்தில் அப்பர்சுவாமிகளாலும் வியந்துரைக்கப்பட்டமை காண்க.

இத்தகைப்பெரியாரது தெய்வப்புலமையை நோக்காது அவருரைகளிற் பலவற்றைப் பின்வந்தார் மறுத்தலின் அம்மறுப்புக்களை மறுத்து அப்பெரியாரது கொள்கைகளை நாட்டுதல் சிறிதும் அபசாரமாகாதென்ப துணரத்தக்கது.

இனி நக்கீரனார் அகத்தியனாரிடம் இலக்கணங் கற்குமுன் புலமை நிரம்பாமையின் அக்காலேக் கண்ட களவியிலுரையிற் சில பின்னுள்ளாரால் மறுக்கப்பட்டன வென்பர் சிலர். அது பேதையர் கூற்றேயன்றிப் பிறிதில்லை. பத்தி வாயிலாக நூற் பிரமாணங்களை நம்பினல் இறைவன் ஆணைப்படியே மெய்யுரை காணக்கொணர்ந்த பிள்ளையார் பதந்தொறுங் கண்ணீர் வார்ந்து மெய்ம்மயிர் சிலிர்த்து உடன்பட்டமையானும், ஏனை நல்லிசைப் புலவர் பலரும் மெய்யுரைபெற்றுமேன்றமையானும் களவியலுரை வழுவறு மாண்பிற்றென்பதுபோதரும்.

இனிப் பத்தியின்றி நக்கீரனார் சரிதங்களை உபசாரமென்று தள்ளுவாராயின் நியாயவாயிலாகவேனும் நக்கீரனாருரையும், அதனை மறுத்த பிற்காலத்தா ருரையும் அதனை மறுத்து நக்கீரனாருரையே மெய்யுரையென்று நாட்டிய நம்முரையுஞ்சீர்தூக்கி யாராய்ந்து நூற்பிரமாணங்கொண்டு தள்ளுவ தள்ளிக் கொள்ளுவ கொள்ளல்வேண்டும். அவ்வாறின்றி ஈழத்தார், எத்தனைதூரம் அடுக்கி யெழுதினும் அது கொண்டு உண்மைச் சைவராவது, இயற்றமிழ் வல்லாராவது நக்கீரனாருரையினும் பிறருரை விசேடமுடைத்தென்று கொள்ளாரென்க.

இனி நக்கீரனார் கண்ட களவியலுரைவேறு, பிற்காலத்தவர் மறுத்த களவிய லுரைவேறு என்பாராயின் அம்மறுப்புரைகாரரே

"களவியற் பொருள் கண்டார் மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனா"ரென்று முன்னூற் பிரமாணங்களை யுடன்பட்டமையாற் பிறர் கூற்றுப் பயனில் கூற்றுதல் காண்க.

இனி ஈழத்தார் ஐந்தாவதாகக் கொண்டு கூறிய நாலியல்பு பொதுப் பாயிரமாகாமை எமது பாயிர விருத்தி—156, 157-வது பக்கங்களிற் கண்டு கொள்க.

இன்னும் ஈழத்தார் எமது பாயிர விருத்திபிற் கூறிய கொள்கைகளுட் சிலவற்றுக்கு மாறாக "அணியென்னு முதனிலையின் மேல் இ என்னுஞ் செயப்படுபொருள் விகுதி சேர்த்து அது தொக்கு நிற்ப அணியென்று செய்கைசெய்து கொள்ப" என்றற் றொடக்கத்த சில கூறுகின்றார். அவையெல்லாம் எமது பாயிர விருத்தியின் மறுக்கப் பட்டன வாகலானும், ஈழத்தார் தமது பிரதி பத்தியில் அம் மறுப்பினை யநுவதித்து மறுமையானும், யாம் அவற்றை மீண்டுங் காட்டி மறுக்கப் புகின் அது கூறியது கூறலாக முடிதலானும், அவர் தமது ஓரே விடயத்தில் இடைப்பிற வரலாக நுழைத்துக் கொண்ட அம்மாறுகோளுக்கு மறுதலை பாயிர விருத்தியிற் காண்கவென்று இம்மட்டின் விடுத்து மேற் சேறும்.

இனி இந்நாவலர் வெளியிட்ட 'அநுபபத்திப் பிரதிபத்தி' யென்ற ஆபாசச் சுவடியில் நிறைந்துள்ள வழுக் குழுவினும், பகட்டு மொழிகளினும் சிலவற்றை விளக்கிக் காட்டி அறிவுறுத்தி நிறுத்துவாம்.

தொல்காப்பிய சம்பந்தமான இவ்விவகாரத்திற் றலையிட்ட இந் நாவலரது புலமையைச் சற்று ஆராய்வாம்:—

இவரெழுதிய பிரதிபத்தி முதற் பக்கத்தில் "அஃது மெய்யுரையா" என்கின்றார். அஃது என்னும் ஆய்தத்தொடர் மொழிக் குற்றியலுகரத்தின் முன் மெய்முதன் மொழிவந்து புணரின் ஆய்த மில்லா தென்பதே தொல்காப்பிய விதியாகவும், அதனை யறியாத்தலை விதியால் அது மெய்யுரையா வென்றெழுதவறியாது ஆய்தம் நின்றவாறே புணர்த்திபிடர்ப்பட்டார். இங்ஙனமே, 3-வது பக்கத்தினும் "இதென்கொலோ" என்று வரைந்தனர். "இது"

என்னும் முற்றுகரச் சுட்டுக்குமுன் உயிர் முதன் மொழிவந்து புணரின் ஆய்தந்தோன்று மென்னும் விதியும் அறிந்திலர். இதனால் தொல்காப்பியத்தின் ஒருடக்கமாகிய எழுத்ததிகாரமேனும் நல்லாசிரியனை யடுத்துக் கல்லாமதியினரிவரென்பது தேற்றமாம்.

அம் முற்பக்கத்திற்றானே " மெய்யுரையெனின்பொய்ப் பொருளொழிந்து மெய்ப்பொருள் பயப்பதன்றே மெய்யுரை யெனப்படும்" என வரைந்தனர். இவ்வபத்த வாக்கியத்திலுள்ள ஒழிந்து என்னும் தன் வினை வினையெச்சத்துக்கு முடிவிடம் யாது? பயப்பது என்பரேல் அது மெய்யுரையென்னும் பிறகருத்தாவின் வினையன்றோ? ஆகவே இவர் எடுத்த வினையை முடிக்கவறியாரென்பது சிற்றிலக்கணங்கற்கும் சிறுமகாருமறிவர். இதனால் இவர் சொல்லதிகாரமும் கல்லா ரென்பது பெறப்படும்.

20 வது பக்கத்தில் " அதனின் வைத்தன்றே நாடுநகரச் சிறப்பில் மாநகர்க்குக் கோபுரத்தை வருணித்துச் சான்று கூறிய ஆன்றோர் காவியங்களாகிய சாட்சிய தந்திரங்களென்பது" என்றெழுதினர். இந்த வாக்கியத்துள் எழுவாய் பயனிலைகளின் பொருத்தமின்மையைப் பள்ளிச்சிறாரும் தெள்ளத் தெளிந்து எள்ளிப் புகல்வாரென்க.

40-வது பக்கத்தில் " தமிழ்நூல் சொல்ல வந்தார் வடமொழி பெயர்ப்பைத் தமிழ்க்குக் கொள்வதன்றித் தமிழ்மொழியா யிருந்ததனை வடமொழியாக மாறிற்றென்னை யோவெனின்" எனப்பொறித்தனர். இவ்வொரு சிறுவாக்கியத்துள் எத்தனை பிழைகளுள்ளன? (I) வடமொழி பெயர்ப்பென்பதன் பொருளென்னை? தமிழ் மொழிபெயர்ப்பு, ஆங்கிலமொழிபெயர்ப்பு என்றாற் போல்வது எனின், தமிழ் ஆங்கிலம் என்னும் மொழிகளே அவ்வப்பாஷைப் பெயராதல்போன்று வடம் என்பது ஆரிய பாஷைப்பெயராகாமையால் வடமொழி மொழிபெயர்ப்பென்றே கூறல்வேண்டுமன்றி வடமொழிபெயர்ப்பெனல் பொருந்தாமை தேற்றமாம். (2) இருந்ததனை என்பதன்கணுள்ள இரண்டாம் வேற்றுமைக்கு முடிபு யாது? அவ்வாக்கியத்துள் யாதானுமோர் சொற்குறிப்பைத் தடவிப்பார்த்

துத் தெரிந்தமைவாராக. இங்ஙனம் வேற்றுமைப் பொருளறியாத இவர் தாமா நாவலர்! (2) மாறிற்று என்னும் வினைக்குக் கருத்தா யாது? வந்தார் என்பரேல் உயர்திணைக்கருத்தா அஃறிணைப் பயனிலை பெறுமா? பெருமையின் கருத்தாவின்மை பெறப்பட்டது. இங்ஙனமாக வாக்கியங்களைப் பிழையின்றி யெழுதவறியாத இவரன்றோ நாவலபாதர்! இன்னும் இவரெழுதிய அநுபபத்திப்பிரதிபத்தியின் வழுக்களை யாராயப்புகல் மணற்சோற்றிற் கல்லாராய்த லொக்குமாதலின் அவமே காலங்கழித்தற்கஞ்சி விடுக்கின்றோம். கற்றறிந்தடங்குவராக.

இவ்வீழத்தம்பலவாணர் தமக்குச் சிறிதுந் தகாத நாவலப்பட்டஞ் சூடிக்கொண்டதோடமையாது பாதபட்டாபிஷேகமுஞ்செய்து பகட்டுகின்றார். இப்பாதபட்டாபிஷேகத்தைத் தமக்குத்தாமே சூடியதோடும் நில்லாது பெரியார் சிலர்க்குஞ் சூட்டுகின்றார். இதனால் அப்பெரியாரோடொப்ப உலகம் இவரையுங்கொள்ளுமென்னும் இவரது பகட்டுரை நன்று நன்று!!

இத்தகைய பகட்டுப்பட்டங்கட்கு அறிஞர் அஞ்சாரென்பதுந் தெளிக. இன்னுங்கிளம்பிற் பின்னுங்கிளம்புவாம்.

"நுண்மா ணுழைபுல மில்லா னெழினல
மண்மாண் புனைபாவை யற்று."

இங்ஙனம்,
அ. சன்முகன்,
சோழவந்தானூர்.